[24th March 1954

SRI S. DEIVASIGAMANY :—" May we know what are the important resolutions passed? "

MR. SPEAKER :—" The Hon. Minister said that Government had not received the resolutions."

SRI S. DEIVASIGAMANY :—" I want to know the previous resolutions, Sir."

THE HON. SRI K. RAJARAM :—" A separate question may be put, Sir."

SRI N. K. PALANISAMI :—" இந்த மகாநாடு நடக்கும்போதும் அதில் தீர்மானங்கள் நிறைவேறும்போதும் கனம் மந்திரி அவர்கள் கூடவே இருந்தார். அபபடி இருந்தும்கூட அபபடிப்பட்ட தீர்மானம் ஒன்றுமே சர்க்காருக்கு வரவில்லை என்று சொல்லுகிறுர். இதன் அர்த்தம் என்ன என்று கேட்கிறேன்."

MR. SPEAKER :—" அந்த மகாநாட்டில் போட்ட தீர்மானம் உத்தியோக பூர்வமாக சர்க்காருக்கு வரவில்லை என்று தான் சொல்லுகிறுர்."

SRI S. RAMALINGAM :—" இந்த மாகாண பஞ்சாயத்து போர்டு மகாநாடு சர்க்காரின் தூண்டுதலால நடந்ததா அல்லது அவர்களாகவே முயற்சி எடுத்து ஏதேச்சையாக நடத்திஞர்களா ? "

THE HON. SRI K. RAJARAM :—" Sir, Government did not induce this Union to convene a conference. The President of the Union wrote to the Government informing them that they had fixed a date to convene a conference and Government agreed."

SRI Y. MANJAYA SHETTY :—" Sir, is it a fact that the South Kanara Panchayats have moved the Government to recognize a separate Union of theirs and if so, what action has been taken by the Government? "

MR. SPEAKER :—" What has that to do with the main question? The hon. Member may put a separate question."

SRI A. GOVINDASWAMY NAYAGAR :—" பஞ்சாயத்து போர்டு தலைவர்கள் கூடிய மகாநாட்டில் ஆரம்பக் கல்வித் திட்டததிற்கு எதிர்ப்பு இருந்தது. ஆகவே இத்திட்டத்திற்கு பஞ்சாயத்து போர்டு ஏரியாவில் எதிர்ப்பு இருக்கிறது எனற காரணத்திஞல் இதை உடனே கைவிடுவதற்கு சர்க்கார் முன் வருமா? "

THE HON. SRI K. RAJARAM :—" Sir, I know it only from what has appeared in the press. I was not present at the conference at that time."

MR. SPEAKER :—" There are a number of questions and I should finish them in time. I will pass on to the next question."

Shifting of the Madras Legislative Assembly to Fort St. George.

* 330 *Q*.—SRI A. RATNAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal to shift the Madras Legislative Assembly to the old chamber at Fort St. George, after the present session is over;

24th March 1954]

(*b*) if not, why;

(*c*) whether there is any proposal to utilize the Assembly buildings for official purposes after shifting the Assembly to Fort St. George; and

(*d*) if so, the details thereof?

THE HON. SRI C. SUBRAMANIAM :—" (*a*) & (*b*) There is no such proposal. The Secretariat will become unfit for ordinary office work if this be done.

" (*c*) & (*d*) Do not arise."

SRI A. RATNAM :—" சட்டசபை மாடியில் அசெம்பளி செக்ரடேரியட் குமாஸ்தாக்களும் வேலை செய்கிறார்கள். அதிகாரிகளும் வேலை செய்கிறார்கள். சட்டசபை நடக்கும்போது அவர்களுக்கு தொந்தரவாக இருக்கிறது; அவர்கள் வேலையும் நடக்கவில்லை. எனவே, இந்தச் சட்டசபையை . . ."

MR. SPEAKER :—" அதைப் பார்த்துக் கொள்வதற்கு நான் இருக்கிறேன்."

*SRI A. RATNAM :—" அவர்களுக்கு வேறு இடத்தில் அதாவது பக்கத்தில் வேறு கட்டிடம் அமைத்துத்தர கனம் மந்திரி அவர்கள் தயாராக இருககிறார்களா ? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" I do not know how that question is relevant here, Sir."

SRI K. VINAYAKAM :—" Sir, the old Legislature buildings are found more suitable in their environment and so a feeling has been there that the Legislature should be shifted to the old place. Arising out of the answer furnished by the Hon. Finance Minister, will the Hon. Minister take steps to build a few more blocks around this chamber, so that this hall can be kept in a better condition? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" I do not know how additional buildings will improve this hall. Apart from that, the necessity of putting up further blocks will be examined and steps taken."

SRI S. RAMALINGAM :—" இந்தச் சட்டசபை கட்டிடம் வெயில் காலத்தில் ரொம்பவும் உஷ்ணமாக இருக்கிறது. அதை உத்தேசித்தாவது பழைய கட்டிடத்திற்குப் போவதற்கு சர்க்கார் உத்தேசிப்பார்களா ? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, I thought hon. Members preferred this place to the other place. This is more roomy and central also. I think, Sir, we will have to continue here itself and whatever other arrangements are necessary to make it more convenient will have to be done here."

MR. SPEAKER :—" Ordinarily, the Speaker should not intervene in questions. However, this is an important thing affecting the entire Legislature. I must, therefore, tell the House that the

[24th March 1954

number of visitors has increased and hitherto it was not the case. We cannot accommodate them in the old building as we are able to do here.''

10-10 a.m. **Sri P. RAMAMURTHI** :—'' கனம் சபாநாயகர் சொன்னதை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். பார்வையாளர்கள் ஜாஸ்தியாக வரவேண்டியது அவசியம்தான். அதனால் வேறு இடத்திற்குப் போகவேண்டாம்.''

Non-Gazetted Officers' Wives' Association, Tanjore.

* 331 *Q.*—Sri A. K. SUBBIAH : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have received any memorandum from the Non-Gazetted Officers' Wives' Association of Tanjore district regarding increase of pay, dearness allowance and other allowances to non-gazetted officers; and

(*b*) the action taken or proposed to be taken by the Government thereon?

The Hon. Sri C. SUBRAMANIAM (on behalf of the Hon. Chief Minister) :—'' (*a*) A letter was received from the Secretary of the Association forwarding the resolutions passed at the Second Annual Conference of the Association, Tanjore district, held on 1st November 1953.

'' (*b*) Government are trying to get over the shock of the intervention by wives of officials which is a new development in the affairs of Government. The substance of the matter is receiving every attention possible.''

Sri A. K. SUBBIAH :—'' N.G.O. மனைவிமார்கள் சங்கத்தைச் சட்ட விரோதம் என்று பிரகடனம் செய்யும் எண்ணம் சர்க்காருக்கு உண்டா ? ''

The Hon. Sri C. SUBRAMANIAM :—'' Sir, that may lead to very serious consequences. Therefore, we have to think twice before taking that action.''

Sri M. PALANIYANDI :—'' N.G.O. மனைவிமார்களின் சங்கத்தைக் கண்டு திடுக்கிடுவதாக கனம் மந்திரி அவர்கள் கூறினார். அவர்கள் எல்லோரும் சேர்ந்து வந்து கேட்டால், N.G.O.-க்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்கவேண்டிய நிலைமை வந்துவிடுமோ என்று பயப்படுகின்றாரா ? அப்படி பயப்படாமல் அவர்களது கோரிக்கைகளைக் கொடுப்பதற்கு முன் வருவாரா ? ''

The Hon. Sri C. SUBRAMANIAM :—'' This is the first time that wives have come forward to make representations on behalf of their husbands. That is why, we have to take some time and consider the whole matter.''

Sri M. KALYANASUNDRAM :—'' N.G.O. மனைவிமார்களின் சங்கத்தைக் கண்டு கனம் மந்திரி அவர்கள் திடுக்கிடவேண்டிய அவசியமில்லை. அதிர்ச்சி அடைய வேண்டிய அவசியமில்லை. அதிர்ச்சி சிகிச்சைக்கும் போக வேண்டிய அவசியமில்லை. எல்லாம் சர்க்கார் கொள்கையின் விளைவு. சர்க்கார் N.G.O.-க்களை பழி வாங்கும் கொள்கையை விட்டு அவர்களோடு நேரடியாக பேச்சு வார்த்தைகள் நடத்தி அவர்களுடைய சம்பள உயர்வு போன்ற பிரச்னைகளை சுமுகமாக தீர்க்க முன் வராததால், ஏற்பட்ட அவநம்பிக்கையின் காரணமாக N.G.O.-க்களின் மனைவிமார்கள் சங்கம் சர்க்காரைக் கேட்பதற்கு முன் வந்திருக்கிறது.